**செய்தி வெளியீடு எண் : 1594** **நாள் : 14.09.2022**

# மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் கேரள அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை செயல்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் தலைமையில், துறை சார்ந்த அலுவலர்கள் கொண்ட குழு கேரள மாநில தலைநகரமான திருவனந்தபுரத்தில் தகவல் தொழில்நுட்பத் துறை செயல்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டது.

செப்டம்பர் 13 அன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருவனந்தபுரத்தில் கேரள அரசின் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜாய், இ.ஆ.ப., தகவல் தொழில் நுட்பத்துறை செயலாளர் திரு. ரத்தன்கேல்கர், இ.ஆ.ப., கேரள மாநில தகவல் தொழில் நுட்பத்துறையின் செயல் இயக்குநர் திரு. சினேகில்குமார்சிங், இ.ஆ.ப., மற்றும் பல்வேறு துறைகளின் தலைமை அலுவலர்களுடன் விரிவான கலந்தாலோசனை நடத்தினார். கேரள அரசின் பல்வேறு துறைகளில் தகவல் தொழில்நுட்பவியலின் ஆளுகை மற்றும் இணையவழி சேவைகளின் பயன்பாடு போன்ற பல தகவல்கள் குறித்து கலந்தாலோசித்தனர்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள டெக்னோபார்க் தொழில்நுட்ப பூங்காவை *(Technopark IT Park)* பார்வையிட்டு, டெக்னோபார்க்கில் இருக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதை சார்ந்த சேவை நிறுவனங்கள் *(IT/ITeS)* பற்றியும், ஆண்டொன்றுக்கு புதிதாக உருவாகும் வேலைவாய்ப்புகள் பற்றியும் அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடினார்.

கேரள அரசு தகவல் தொழில்நுட்பத்தை எவ்வாறு மருத்துவம், கல்வி, போக்குவரத்து போன்ற துறைகளில் பயன்படுத்துகிறது என்பது பற்றியும் மற்றும் கேரள அரசின் இணையவழி சேவைகள் பற்றியும் கேட்டறிந்தார். மேலும் தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் துறையின்

புதுமையான முயற்சிகள் பற்றியும் கேரள அரசு உயர் அலுவலர்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை, தலைமைச் செயல் அலுவலர் திரு. பிரவீன் பீ. நாயர், இ.ஆ.ப, தமிழ்நாடு அரசு, தலைமைத் தொழில்நுட்ப அலுவலர் திரு. ராபர்ட் ரவி, தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு. ஹரிபாலச்சந்திரன் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in